**செ. கு. எண்**:377 **நாள்**:25.10.2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

# அறிக்கை – 25.10.2012

20.10.2012 அன்று திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், செங்கட்டாம்பட்டு கிராமம், சுந்தரராஜபுரத்தைச் சேர்ந்த திரு. காளியப்பன் என்பவரின் மகன் திரு. துரை தனது இரு சக்கர வாகனத்தில் விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், மரக்காணம், கிழக்குக் கடற்கரை சாலையில் சென்று கொண்டிருந்த போது அரசுப் பேருந்து மோதியதால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை, மயிலாப்பூர், டாக்டர் நடேசன் சாலையைச் சேர்ந்த திரு. மாதவன் என்பவரின் மகன் திரு. வினோத்குமார் தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, ராயப்பேட்டை, டாக்டர் பெசன்ட் சாலை அருகே, மாநகரப் பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

21.10.2012 அன்று திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், பூசாரிபட்டி கிராமம் அருகே திருப்பூரிலிருந்து தேனி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து, இரு சக்கர வாகனத்தின் மீது மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த விருதுநகர் மாவட்டம், காரியாப்பட்டி கிராமம், அம்பேத்கர் நகரைச் சேர்ந்த திரு. சின்னசாமி என்பவரின் மகன் திரு. கணேசன், வேலூர் மாவட்டம், வாணியம்பாடியைச் சேர்ந்த திரு. ரகுபதி என்பவரின் மகன் திரு. ஸ்ரீதர் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இந்த சாலை விபத்துக்களில் அகால மரணமடைந்த திரு. துரை, திரு. வினோத்குமார். திரு. கணேசன் மற்றும் திரு. ஸ்ரீதர் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், மரக்காணம், கிழக்குக் கடற்கரை சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் ஒரு நபரும், சென்னை, ராயப்பேட்டை, டாக்டர் பெசன்ட் சாலை அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் ஒரு நபரும், திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், பூசாரிபட்டி கிராமம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் இரண்டு நபர்களும் காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்த திரு. துரை, திரு. வினோத்குமார் திரு. கணேசன் மற்றும் திரு. ஸ்ரீதர் ஆகியோரின் குடும்பங்களுங்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:-**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**